இன்றைய வேளாண் செய்திகள்

28.12.2012 A.M

## காற்றழுத்தத் தாழ்வு நிலை : தென் தமிழகத்தில் மழை தொடரும்



வங்கக் கடலில் உருவாகியுள்ள குறைந்த காற்றழுத்தத் தாழ்வு நிலையால் தென் தமிழகத்தில் ஓரிரு நாள்களுக்கு மழை தொடரும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது குறித்து வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் கூறியது:

வங்கக் கடலில் உருவான காற்றழுத்தத் தாழ்வு நிலை அதே பகுதியில் நீடிக்கிறது.

இதன் காரணமாக தென் தமிழகத்தில் ஓரிரு நாள்களுக்கு மழை தொடரும். இதேபோல வெள்ளிக்கிழமை இரவு வட தமிழகத்திலும் மழையை எதிர்பார்க்கலாம்.

காற்றழுத்தத் தாழ்வு நிலை நிலை கொண்டுள்ள பகுதியில் இருக்கும் மேகங்கள் தென் தமிழகத்தை நோக்கி தள்ளப்படுகின்றன. இதனால் அந்தப் பகுதிகளில் மழை பெய்கிறது. காற்றழுத்தத் தாழ்வு நிலை அரபிக் கடலுக்கு நகர்ந்தால் மழை குறையும் என்றனர்.

வானிலை முன்னறிவிப்பு: தென் கடலோர தமிழகத்தில் வெள்ளிக்கிழமை மழையோ இடியுடன் கூடிய மழையோ பெய்ய வாய்ப்புள்ளது. சில பகுதிகளில் பலத்த மழை பெய்யவும் வாய்ப்புள்ளது. வட தமிழகம் மற்றும் புதுவையில் ஆங்காங்கே மழை பெய்யும். தரைக்காற்ற பலமாக வீசும்.

சென்னையைப் பொருத்தவரையில், வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். சில பகுதிகளில் மழையோ இடியுடன் கூடிய மழையோ பெய்யும். தரைக்காற்று பலமாக வீசும்.

### கரும்பு விவசாயிகள் ஆலோசனை

ஆரணி, சேவூர் கரும்பு விவசாயிகள் சங்க ஆலோசனைக் கூட்டம் புதன்கிழமை நடைபெற்றது.
சங்கத் தலைவர் சி.ராஜேந்திரன் தலைமை தாங்கினார். நிர்வாகிகள் வி.ரகுபதி, எஸ்.சாமி, பி.எஸ்.மணி, ஜி.மோகன், எம்.அரிகிருஷ்ணன் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.
இக் கூட்டத்தில், ஆம்பூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை நிர்வாகம் நல்ல முறையில் அரவை செய்து வருகிறது.
பதிவு செய்யப்பட்ட கரும்புக்கு முறையான வெட்டு உத்தரவு, உரிய காலத்தில் கட்டிங் ஆர்டர் கொடுத்தல், உடனுக்குடன் லோடு ஏற்றுதல், மேலும் பணத்தையும் வாரந்தோறும் வழங்குதல் உள்ளிட்ட நிர்வாக செயல்களை பாராட்டி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

### பவானிசாகர் அணை நீர்மட்டம் 42.63 அடி

பவானிசாகர் அணை நீர்மட்டம் வியாழக்கிழமை நிலவரப்படி 42.63 அடியாக இருந்தது. அணைக்கு விநாடிக்கு 112 கனஅடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 150 கன அடி நீர் திறந்துவிடப்பட்டது. வாய்க்காலில் பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்படவில்லை. அணையில் நீர் இருப்பு 2.90 டி.எம்.சி.

### விவசாய தொழிலாளர்கள் பவானியில் உண்ணாவிரதம்

தலித் மக்களுக்கு ஒதுக்கப்பட்ட நிலத்தை வழங்கக் கோரி, பவானியை அடுத்த காளிங்கராயன்பாளையத்தில் அகில இந்திய விவசாயத் தொழிலாளர்கள் சங்கத்தினர் வியாழக்கிழமை உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.
விருமாண்டாம்பாளையம் கிளை சார்பில் நடைபெற்ற இப் போராட்டத்துக்கு ஈரோடு வட்டப் பொருளாளர் வி.இளங்கோ தலைமை வகித்தார். கிளைத் தலைவர் கே.செல்லப்பன், செயலாளர் கே.முருகன், பொருளாளர் ஆர்.செங்கோடன் முன்னிலை வகித்தனர். தீண்டாமை ஒழிப்பு முன்னணி மாவட்டச் செயலாளர் பி.பி.பழனிசாமி, வட்டச் செயலாளர் கே.ஆர்.விஜயராகவன் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.
எலவமலை கிராமத்தில் தலித் மக்களுக்கு ஒதுக்கப்பட்டு பட்டா வழங்கிய நிலத்தை சிலர் ஆக்கிரமித்துள்ளனர். அரசு ஒதுக்கிய நிலத்தை மீட்டு வழங்க நடவடிக்கை எடுக்குமாறு இப் போராட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.
அரசு ஊழியர் சங்க முன்னாள் மாநிலத் தலைவர் கே.ராஜ்குமார், தீண்டாமை ஒழிப்பு முன்னணி மாவட்டத் தலைவர் எம்.அண்ணாதுரை, விவசாயத் தொழிலாளர் சங்க பவானி வட்டச் செயலாளர் எஸ்.மாணிக்கம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## விவசாயிகளுக்கு பருத்தி சாகுபடி பயிற்சி

வெண்ணந்தூர் வட்டாரத்திற்குள்பட்ட நாச்சிப்பட்டி, அத்தனூர், ஆயிபாளையம், அக்கரைப்பட்டி, ஒ.சௌதாபுரம் ஆகிய கிராமங்களில் அட்மா திட்டத்தின் கீழ், விவசாயிகளுக்கு பருத்தி பயிர் சாகுபடி முறைகள் குறித்து பயிற்சி அண்மையில் அளிக்கப்பட்டது. இதில் பருத்தி விவசாயி சீனிவாசன் விதை நேர்த்தி முறைகள் குறித்து செயல்விளக்கம் செய்து காண்பித்தார்.

அத்தனூர்புதூர் ராமமூர்த்தி இயந்திரத்தின் மூலம் பருத்தி அறுவடை செய்யும் முறைகளை குறித்தும், அக்கரைப்பட்டி விவசாயி செந்தில் பருத்தி வீரிய ஒட்டு ரக உற்பத்தி, பருத்தி பிளஸ், பருத்தி நுண்ணூட்டச் சத்து பயன்படுத்தும் முறைகள் போன்றவை குறித்து செயல்விளக்கம் செய்து காண்பித்தனர்.

அட்மா வட்டார தொழில்நுட்ப மேலாளர் ரமேஷ், தொழில்நுட்ப வல்லுநர் ஜமுனா ராணி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## மின் இணைப்பு கோரி ஆட்சியரிடம் விவசாயிகள் மனு

இதுகுறித்து ஆட்சியர் ப. செந்தில்குமாரிடம், தமிழக ஏரி மற்றும் ஆற்றுப் பாசன விவசாயிகள் சங்க மாநிலத் தலைவர் விசுவநாதன்

அண்மையில் அளித்த மனு:

அரியலூர் மாவட்டம், திருமானூர் ஒன்றிய விவசாயிகளுக்கு 12 மணி நேரம் மின்சாரம் கிடைக்க நடவடிக்கை எடுத்த ஆட்சியருக்கும், மின்

வாரிய தலைமை பொறியாளருக்கும் நன்றி.அதேபோல, டெல்டா மாவட்ட விவசாயிகளுக்கு கிடைக்கும் அனைத்து சலுகைகளும்

திருமானூர் ஒன்றிய டெல்டா விவசாயிகளுக்கு கிடைக்கவும், மின் இணைப்பு கேட்டு காத்திருக்கும் விவசாயிகளுக்கு உடனடியாக

இணைப்பு கிடைக்கவும் ஆட்சியர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

புள்ளம்பாடி வாய்க்காலில் தண்ணீர் வராததாலும், சுக்கிரன் ஏரி வறண்டதாலும் சுமார் 4 ஆயிரம் ஏக்கரில் நெல் சாகுபடி

பொய்த்துப்போனது. எனவே, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ. 25 ஆயிரம் இழப்பீடு பெற்றுத் தர வேண்டும்.

கருப்பிலாக்கட்டளை ஓடையை தூர்வாரி, அகலப்படுத்தி, சுக்கிரன் ஏரியுடன் இணைக்க வேண்டும். இதன்மூலம், மழைக் காலங்களில் வரும்

நீரை சேமித்து 20 ஆயிரம் ஏக்கர் சாகுபடி நிலங்களை காப்பாற்ற மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**விவசாய தொழிலாளர் சங்கப் பேர வை கூட்டம்**

தமிழ் மாநில விவசாய தொழிலாளர் சங்கத்தின் கரூர் மாவட்ட சிறப்புப் பேரவைக் கூட்டம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இதில், கீழவெண்மணி தியாகிகள் நினைவு தினம் சாதிய, சமூக, ஒடுக்குமுறைக்கு எதிரான நாளாகக் கடைபிடிக்கப்பட்டது.

கூட்டத்துக்கு சங்கத்தின் மாவட்டத் தலைவர் கே. குப்புசாமி தலைமை வகித்தார். மாநிலச் செயலரும், சட்டப்பேரவை முன்னாள்

உறுப்பினருமான நா. பெரியசாமி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்டச் செயலர் கே.கே. பெரியசாமி ஆகியோர் கலந்து கொண்டு

பேசினர். கூட்டத்தில் சாதி, மதம் ஆகியவற்றின் பெயரால் மக்களைப் பிளவுபடுத்துகின்ற செயல்களில் ஈடுபடுவோர் மீது நடவடிக்கை

எடுக்க வேண்டும்.

சமூக நல்லிணக்கத்தை வலியுறுத்தி, தொழிற்சங்கம் சார்பில், 28-ம் தேதி நடைபெறவுள்ள மாநிலம் தழுவிய ஆர்ப்பாட்டத்தில் தமிழ் மாநில

விவசாய தொழிலாளர் சங்கம் கலந்து கொள்வது எனத் தீர்மானிக்கப்பட்டது.

கூட்டத்தில் சங்கத்தின் மாவட்டச் செயலர் ஆர். தங்கவேல், பொருளாளர் என். தங்கராஜ், துணைத் தலைவர் பி. பாலன், துணைச் செயலர்

எம்.பி. செல்வம் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

## மேட்டூர் அணை நீர்மட்டம் : 32.76 அடி

மேட்டூர் அணையின் நீர்மட்டம் புதன்கிழமை மாலை 32.76 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 1,029 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து வினாடிக்கு 509 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது.

கல்லணையிலிருந்து வெண்ணாற்றில் வினாடிக்கு 200 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. காவிரி, கல்லணைக் கால்வாய்,

கொள்ளிடத்தில் தண்ணீர் திறக்கப்படவில்லை.

தினமலர்

இன்றைய வேளாண் செய்திகள்

28.12.2012 A.M

## இணையதளத்தில் புதிய ஆவின் அட்டைகள் : மக்கள் ஆர்வம்

சென்னை : இணையதளம் மூலமாக, புதிய ஆவின் பால் அட்டைகள் விண்ணப்பிக்கும் திட்டம், பொதுமக்களிடையே பெரும் வரவேற்பை பெற்றுள்ளது. இதுகுறித்து ஆவின் அதிகாரி ஒருவர் கூறியதாவது: கடந்த 1ம் தேதி முதல் நேற்று வரை இணையதள விண்ணப்பங்களில், 600 புதிய பால் அட்டைகளுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இவர்களுக்கு புதிய அட்டைக்கான பதிவு எண், மின்னஞ்சல் மூலம் அனுப்பப்படும். இந்த பதிவு ரசீதை படிநகல் எடுத்து, அருகில் உள்ள ஆவின் அலுவலகத்திற்கு சென்று, அங்கு ஆவின் அட்டைகளை பெற்று கொள்ளலாம். அதன் பின்னர், இணையதளத்திலேயே மாத வாடகை செலுத்தி புதுப்பித்து கொள்ளலாம்.

இவ்வாறு அதிகாரி தெரிவித்தார்.

## கருகி வரும் கொண்டைக்கடலை செடி :கண்டுகொள்ளாத வேளாண் துறை

உடுமலை : குடிமங்கலம் பகுதியில், மானாவாரியாக பயிரிடப்பட்ட கொண்டைக்கடலை செடிகள் கருகி வருவது குறித்து வேளாண் துறையினர் எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல், மவுனம் காப்பதால், விவசாயிகள் வேதனை அடைந்துள்ளனர்.

குடிமங்கலம் மற்றும் சுற்றுப்பகுதிகளில், வடகிழக்கு பருவ மழையை அடிப்படையாக கொண்டு, கொண்டைக்கடலை சாகுபடி மானாவாரியாக மேற்கொள்ளப்படுகிறது. இந்தாண்டு, 5,000 ஏக்கருக்கும் அதிகமாக கொண்டைக்கடலை, நவ., மாத துவக்கத்தில் பயிரிடப்பட்டது.

விதைப்பு பணிக்கு பின் பருவமழை பெய்யவில்லை. இதனால், பல இடங்களில், கொண்டைக்கடலை விதைகள் முளைவிடவில்லை. முளைத்த செடிகள் கருகி வருகின்றன. தற்போது, பனிப்பொழிவு காரணமாக, அரைகுறையாக முளைத்த செடிகளில், புழுத்தாக்குதல் அதிகரித்துள்ளது. போதிய வழிகாட்டுதல் இல்லாததால், விவசாயிகள் புழுத்தாக்குதலுக்கு எந்த மருந்தை அடிப்பது என தெரியாமல் திணறி வருகின்றனர். குடிமங்கலம் வட்டாரத்தின் முக்கிய சாகுபடியான கொண்டைக்கடலை சாகுபடி பாதிக்கப்பட்டுள்ள போதிலும், வேளாண் துறையினர் எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் மவுனம் காத்து வருகின்றனர்.

விவசாயிகள் கூறியதாவது:

ஆண்டுக்கு ஒரு முறை பயிரிடப்படும் கொண்டைக்கடலை சாகுபடியே குடிமங்கலம் பகுதி விவசாயிகளின் வாழ்வாதாரமாக உள்ளது. இந்தாண்டு மழை இல்லாததால், கொண்டைக் கடலை செடிகள் கருகி வருகின்றன. தற்போதைய நிலையில், ஏக்கருக்கு ஒரு மூட்டை கூட விளைச்சல் கிடைக்காத நிலை உள்ளது.

இந்த விளைச்சலும், தற்போது அதிகரித்துள்ள புழு தாக்குதலால் கிடைக்குமா என்பது கேள்விக்குறியாகி உள்ளது. சாகுபடியில், பல்வேறு பிரச்னைகள் ஏற்பட்ட போதும், குடிமங்கலம் வட்டார வேளாண் துறையினர் எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் உள்ளனர்.

தற்போதுள்ள புழுத்தாக்குலை கட்டுப்படுத்த தேவையான ஆலோசனை கூட்டங்கள் நடத்த வேண்டும். கருகியுள்ள கொண்டைக்கடலை செடிகள் குறித்து ஆய்வு நடத்தி, தமிழக அரசுக்கு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும். இதனால், விவசாயிகளுக்கு நிவாரணம் கிடைக்க வாய்ப்புள்ளது. வேளாண் துறையினர் தொடர்ந்து மெத்தனப்போக்கை கடைபிடித்தால், விரைவில் போராட்டத்தில் ஈடுபடுவோம்.இவ்வாறு, அவர்கள் கூறினர்.

## கருகும் தென்னை மரங்கள் கலங்கும் விவசாயிகள்

தேனி : தேனி மாவட்டத்தில் இரண்டாம் போக நெல் சாகுபடியும், தண்ணீர் இல்லாமல் பாதிப்பிற்குள்ளாகி உள்ளது. தென்னை மரங்களே கருகி வருகின்றன. இதனால் வறட்சி மாவட்டமாக அறிவிக்க வேண்டும், என தேனி மாவட்ட விவசாயிகள் வலியுறுத்தி உள்ளனர். மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழையும், தென்மேற்கு பருவமழையும் பொய்த்து விட்டது. ஆண்டு சராசரியை விட நடப்பு ஆண்டு 55 சதவீதம் குறைவான அளவே மழை பெய்துள்ளது. நிலத்தடி நீரும் வறண்டு விட்டது. மின்பற்றாக்குறை காரணமாக மின்மோட்டார்களையும் பயன்படுத்த முடியவில்லை. இதனால், முதல் போக நெல் சாகுபடி செய்த விவசாயிகளுக்கு சாகுபடி கைக்கு வந்து சேரவில்லை. இரண்டாம் போக சாகுபடிக்கு தேவையான தண்ணீரும் இல்லாததால், நெல் கருகி வருகிறது. முல்லை பெரியாற்று பாசனத்திற்கு இன்னும் 12 நாட்களுக்கு கூட தண்ணீர் இல்லை. ஆனால் ஜனவரி இறுதி முதல் பிப்., 15 வரை சில பகுதிகளுக்கு தண்ணீர் தேவைப்படுகிறது. மாவட்டத்தில் உள்ள 135 கண்மாய்களிலும், ஒரு வார தேவைக்கு கூட தண்ணீர் இல்லை. இதனால் இரண்டாம் போக நெல் கைக்கு வந்து சேருமா என விவசாயிகள் கலங்கிப்போய் உள்ளனர். தென்னை மரங்கள் வறட்சியால் கருக தொடங்கி உள்ளன. இந்நிலை ஒரு மாதம் நீடித்தால் மா மரங்களும் கருகி விடும். தோட்ட விவசாயமும் பாதிக்கப்பட்டுள்ளது.

இதனால் தேனி மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவித்து விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்க வேண்டும், என விவசாயிகள் வலியுறுத்தி உள்ளனர்.

தேனி மாவட்ட விவசாயிகள் சங்க தலைவர் பாண்டியன் கூறியதாவது: விவசாயிகள் கடனை கட்டுவதா, கண்களில் வழியும் கண்ணீரை துடைப்பதா, என தெரியாமல் தவித்து வருகின்றனர். கடன் கொடுத்த வங்கிகள் விவசாயிகள் கடனை திரும்ப செலுத்தவில்லை எனக்கூறி அவர்களது சொத்துக்களை ஏலம் விட நோட்டீஸ் கொடுத்து வருகின்றன. மாவட்டத்தில் இவ்வளவு வறட்சி நிலவியும், வறட்சி பற்றிய புள்ளி விவரங்கள் இன்னமும் சேகரிக்கப்படவில்லை. இரண்டு போகமும் பாதிக்கப்பட்டு, கலங்கி நிற்கும் விவசாயிகளுக்கு உதவி செய்யும் வகையில், மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவித்து, விவசாயிகளுக்கு தேவையான உதவிகளை வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்,என்றார்.

**பயிர் காப்பீடுக்கு நெருக்கடியால் விவசாயிகள் ஏமாற்றம் : தேசிய வங்கிகளால் பலர் பதிய முடியாத அவலம்**

ராமநாதபுரம் : ராமநாதபுரம் மாவட்டத்தில், கடன் பெறுவதற்கான உத்தரவு கடிதம் பெற்றதால், பயிர் காப்பீடு செய்ய முடியாத நிலைக்கு, பல விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளனர். பட்டா குறித்த பல்வேறு நெருக்கடியாலும், பிரிமீயம் செலுத்த முடியாமல் தவிக்கின்றனர். பருவ மழை பொய்த்து, விவசாயிகள் பெருத்த நஷ்டத்தை சந்தித்துள்ளனர். இந்நிலையில், பயிர் காப்பீடு செய்ய கோரி காப்பீடு நிறுவனம் அறிவித்தது. பல்வேறு நடைமுறை சிக்கல்களால், பிரிமீயம் செலுத்தமுடியாமல் காப்பீடு பெற தகுதி அற்றவர்களாகி விட்டனர். விவசாயிகள் கூறியதாவது: நிலங்களுக்கு தனி பட்டா இருந்தால் தான், காப்பீடுக்கு பதியமுடியும், என அதிகாரிகள் கூறுகின்றனர். பல விவசாயிகள் கூட்டுப்பட்டா வைத்து, விவசாயம் செய்கின்றனர். அவர்களால் காப்பீடு திட்டத்தில் சேரமுடியவில்லை. மேலும், விவசாயப்பணிகள் துவங்கிய காலத்தில், அரசு, விவசாயிகளுக்கு கடன் மேளா நடத்துவதாக கிராமங்கள்தோறும், அமைச்சர்கள் மூலம், பயிர் கடன் பெற "வங்கி அனுமதி உத்தரவு' கடிதம் வழங்கினர். ஆனால், நடைமுறையில் பல வங்கிகள், அனுமதி கடிதத்தை கொடுத்தும், பயிர் கடன் வழங்கவில்லை. தற்போது, பயிர் காப்பீடுக்கு விண்ணப்பிக்கும்போது, "நீங்கள் பயிர்க்கடன் பெற்றுள்ளதால், காப்பீடு செய்ய தகுதியில்லை' என திருப்பி அனுப்பி விடுகின்றனர். கடன் வாங்காமல், அனுமதி கடிதம் மட்டும் வாங்கியதை கொண்டு, கடன் வாங்கிவிட்டதாக கணக்கு வைத்துள்ளனர். இதனால் பல விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். அருகில் உள்ள சிவகங்கை மாவட்டத்தில் டிச.,31வரை பணம் செலுத்தலாம் என அறிவித்துள்ளநிலையில், இங்கு மட்டும் கடைசி தேதி முடிந்துவிட்டது, என

டிச.,15ம் தேதியே விரட்டப்பட்டோம், என்றனர். ராமநாதபுரம் கூட்டுறவு சங்கங்களின் இணைபதிவாளர் ஆரோக்கிய சுகுமார் கூறியதாவது: "லோன் மேளா'வில் கொடுத்த உத்தரவின்படி, கூட்டுறவு சங்கங்களில், அனைவருக்கும் பயிர்க்கடன் வழங்கப்பட்டுள்ளது. வணிக வங்கிகள் தான் கடன் தரவில்லை என்ற புகார் வந்துள்ளது.

கடன் தராவிட்டாலும், விவசாயிகள் கடன் பெறவில்லை என்ற சான்றிதழை கொடுத்து, பதிந்து கொள்ளலாம். கடந்தாண்டைவிட, இந்தாண்டு காப்பீடு செய்த விவசாயிகள் எண்ணிக்கை அதிகமாகவே உள்ளது. கடைசி தினம் குறித்து அறிவிப்பு செய்தபின்பும், கூடுதலாக ஒரு வாரம்வரை அவகாசம் வழங்கப்பட்டது. இதற்காக சனி, ஞாயிறுக்கிழமைகளிலும் கூட்டுறவு வங்கிகள் செயல்பட்டது, என்றார்.

## புஞ்சை நில சாகுபடியில் பாதிப்பு புள்ளி விவரத்தில் சேர்க்க மறுப்பு

காளையார்கோவில் : மறவமங்கலம் பிர்க்காவில் புஞ்சை நிலங்களில் பயிரிடப்பட்டுள்ள நெல் சாகுபடியையும் வறட்சி நிவாரணம்,குறித்த புள்ளி விபரங்களில் சேர்க்கவேண்டுமென விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

இப் பிர்க்காவில் மாரந்தை, சேத்தூர் ,காஞ்சிரம்,சாக்கூர் ஆகிய வி.ஏ.ஓ., கிராமங்களில் நஞ்சை,புஞ்சை நிலங்களில் நெல்சாகுபடி செய்யப்பட்டுள்ளது. தண்ணீர் இல்லாமல் பயிர்கள் கருகி விட்டது. வேளாண்மை,வருவாய்த்துறை அதிகாரிகளும் பாதிப்பு குறித்து புள்ளி விபரம் சேகரித்து வருகின்றனர்.நஞ்சை நில சாகுபடிக்கு மட்டும் கணக்கிடுவதாகவும்,புஞ்சை நில நெல்சாகுபடி குறித்து கணக்கிடவில்லை என்றும்,புஞ்சை நில சாகுபடியையும் கணக்கிட்டு,வறட்சி நிவாரணம் வழங்கவேண்டுமென விவசாயிகள் கலெக்டரிடம் தெரிவித்துள்ளனர்.

முன்னாள் கவுன்சிலர் ராமநாதன் கூறுகையில்," இப்பகுதியில் நஞ்சை நிலங்களை விட, புஞ்சை நிலங்களில் அதிக அளவு பயிரிட்டுள்ளோம்.அதிகாரிகளும் சாகுபடி பாதிப்பு குறித்து புள்ளி விபரம் சேகரித்து வருகின்றனர். புஞ்சை நில நெல் சாகுபடி பாதிப்பு குறித்து கூறினால் அவர்கள் ஏற்க மறுக்கின்றனர். புஞ்சை நில நெல்சாகுபடிக்கும் இழப்பீடு வழங்க வேண்டும், என்றார்.

மறவமங்கலம் வருவாய் அலுவலர் சையது கூறுகையில்," சாகுபடி பாதிப்பு கணக்கு எடுத்து வருகிறோம்.நஞ்சை,புஞ்சையில் நெல் சாகுபடி செய்து, பாதிப்படைந்த விவசாயிகளின் புள்ளிவிபரங்களை சேகரித்து அரசுக்கு அனுப்பி வருகிறோம், என்றார்.

## நெல்லை மாவட்டத்தில் மழை அணைகளுக்கு நீர்வரத்து அதிகரிப்பு

திருநெல்வேலி : நெல்லை மாவட்ட பகுதிகளில் பல்வேறு இடங்களில் மழை பெய்ததால் அணைகளுக்கு

நீர்வரத்து அதிகரித்துள்ளது.

நெல்லை மாவட்ட பகுதிகளில் கடந்த சில நாட்களாக இதமான சீதோஷ்ண நிலை நிலவி வருகிறது. காற்றழுத்த தாழ்வு மண்டலத்தின் காரணமாக நெல்லை மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் பரவலாக மழை பெய்தது. அணைகளின் நீர் பிடிப்பு பகுதிகளிலும் மழை பெய்ததால் அணைகளுக்கும் நீர்வரத்து அதிகரித்துள்ளது. நேற்று காலையில் பாபநாசம் அணையில் 58.70 அடி நீர்மட்டம் உள்ளது. அணைக்கு வினாடிக்கு வரும் 379 கன அடி தண்ணீரில் 605 கன அடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது. சேர்வலாறு அணையில் 69.09 அடி நீர்மட்டம் உள்ளது. மணிமுத்தாறு அணையில் 71.67 அடி நீர்மட்டம் உள்ளது. அணைக்கு வினாடிக்கு 144 கன அடி தண்ணீர் வருகிறது. 35 கன அடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது. கடனா அணையில் 60.50 அடி, ராமநதி அணையில் 54.25 அடி, கருப்பநாதி அணை 51.84, குண்டாறு அணை 33.45 அடி, வடக்கு பச்சாறு 20.50 அடி, நம்பியாறு 18.24 அடி நீர்மட்டம் உள்ளது. கொடுமுடியாறில் 10.75 அடி, அடவிநயினார் அணையில் 64 அடியும் நீர்மட்டம் உள்ளது. பாபநாசம் அணையில் 2 மி.மீ, சேர்வலாறில் 5 மி.மீ, மணிமுத்தாறில் 1.2 மி.மீ, ராமநதி, கருப்பாநதியில் தலா 2 மி.மீ மழையும் பெய்துள்ளது. அம்பையில் 2.3, ஆய்குடியில் 16, சேரன்மகாதேவியில் 6, நான்குநேரியில் 1, பாளையில் 6.8, சங்கரன்கோவிலில் 3, சிவகிரியில் 2, தென்காசியில் 2, நெல்லை 4, ஆலங்குளத்தில் 5, கன்னடியன் கால்வாயில் 5 மி.மீ அளவுகளில் மழை பெய்துள்ளது.

## தேயிலைக்கு விலை பகிர்வு முறை கடைபிடிக்க நடவடிக்கை அவசியம்

கோத்தகிரி : "தேயிலை தொழிற்சாலைகள் மத்திய அரசின் விலை பகிர்வு திட்டத்தை கடைப்படிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்' என, வலியுறுத்தப்பட்டுள்ளது. பொரங்காடு சீமை நலச்சங்க பொதுசெயலாளர் காரிகவுடர் மாவட்ட கலெக்டருக்கு அனுப்பியுள்ள மனு:

நீலகிரி மாவட்டத்தில், 65 ஆயிரம் விவசாயிகள் உள்ளனர். பசுந்தேயிலைக்கு குறைந்த பட்ச விலை நிர்ணயம் செய்யவேண்டும் என, விவசாயிகள் தொடர்ந்து வலியுறுத்தியும் தீர்வு கிடைக்கவில்லை. மாவட்ட விவசாயிகளின் பொருளாதார நெருக்கடியை கருத்தில் கொண்டு, மாநில அரசு வெளியிட்ட அரசாணை எண் 92ஐ செயல்படுத்துவதுடன், தொழிற்சாலைகள் மத்திய அரசின் விலை பகிர்வு திட்டத்தை கடைப்பிடிக்கும் வகையில் நடவடிக்கை எடுக்கவேணடும். இவ்வாறு காரிகவுடர் கூறியுள்ளார்.

## மலர் கண்காட்சியுடன்நாளை குளிர்கால விழா

சேலம்: ஏற்காட்டில், மலர் கண்காட்சியுடன் இரண்டாம் பருவ குளிர்கால விழா நாளை துவங்குகிறது.சேலம் மாவட்டம், ஏற்காட்டில், ஒவ்வொரு ஆண்டும், மே மாதம் கடைசி வாரத்தில், கோடைவிழா கொண்டாடப்படுவது வழக்கம். மலர் கண்காட்சி, காய்கறிகள் கண்காட்சி, நாய், குழந்தைகள் கண்காட்சியும் நடத்தப்படும்.ஏற்காடு மக்களை மகிழ்விக்கும் வகையில், மாவட்ட நிர்வாகம் சார்பில் கலைநிகழ்ச்சிகளும் இடம் பெறும். இந்த ஆண்டு, ஊட்டி, கொடைக்கானல் போன்று, இரண்டாம் பருவ விழாவை கொண்டாட, மாவட்டநிர்வாகம் திட்டமிட்டு அதற்கான பணிகளை மேற்கொண்டுள்ளது.நாளை ஏற்காட்டில், இரண்டாம் பருவ குளிர்கால விழா கொண்டாடப்பட உள்ளது. கலெக்டர் மகரபூஷணம், விழாவை துவக்கி வைக்கிறார்.தப்பாட்டம், ஒயிலாட்டம் நிகழ்ச்சியுடன் விழா துவங்குகிறது. மலர் கண்காட்சி துவக்கி வைக்கப்பட்ட பின், கலையரங்கில் பட்டிமன்றம், சினிமா பாடகர்களின் கச்சேரி நடக்கிறது. காலை, மாலை வேளைகளில், வாண வேடிக்கையும் உண்டு.குளிர்கால விழாவையொட்டி, சுற்றுலா பயணிகள் கூட்டத்துக்கு ஏற்ப, சிறப்பு பஸ்கள் இயக்கப்பட உள்ளன. ஏற்பாடுகளை, மாவட்ட நிர்வாகம் செய்துள்ளது.

## தமிழகம் , கேரளாவில்முட்டை விலை 334 காசாக நிர்ணயம்

நாமக்கல்: தமிழகம், கேரளாவில், முட்டை விலை, 334 காசாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. பத்து தினங்களுக்கு பின், முட்டை விலை, நேற்று ஒரே நளில், ஐந்து காசு ஏற்றம் கண்டிருப்பது, பண்ணையாளர்கள் மத்தியில், மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.நாமக்கல்லில், தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் நடந்தது. முட்டை உற்பத்தி, மார்க்கெட் நிலவரம் குறித்து, பண்ணையாளர்கள் விவாதித்தனர். அதையடுத்து, 329 காசுக்கு விற்பனை செய்யப்பட்ட முட்டை, ஐந்து காசு ஏற்றம் கண்டு, 334 காசாக நிர்ணயம் செய்யப்பட்டது.பத்து தினங்களுக்கு பின், முட்டை விலை மீண்டும் ஏற்றம் கண்டிருப்பது, கோழிப் பண்ணையாளர்கள் மத்தியில், மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. நாட்டின் பிற மண்டலங்களில், முட்டை விலை (காசுகளில்) நிலவரம்:சென்னை, 339 காசு, பெங்களூரு, 330, மைசூரு, 325, ஹைதராபாத், 319, மும்பை, 351, விஜயவாடா, 322, கோல்கத்தா, 360, பார்வாலா, 339, டில்லி, 360 காசு.இவ்வாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.நாமக்கல்லில், நேற்று நடந்த பண்ணையாளர், வியாபாரிகள் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில், முட்டைக் கோழி விலை கிலோ, 38 ரூபாயாக

நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பல்லடத்தில் நடந்த கறிக்கோழி உற்பத்தியாளர் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், அதன் விலை கிலோ, 71 ரூபாயாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

**விதை பண்ணைகளில்இணை இயக்குனர் ஆய்வு**

தர்மபுரி: தர்மபுரி மாவட்டத்தில், விதை பண்ணைகளை கோவை விதை சான்று மற்றும் அங்ககச்சான்று இயக்குனர் அலுவலக விதை சான்று இணை இயக்குனர் ஆய்வு செய்தார். மொரப்பூர் யூனியன், ஜடையம்பட்டி கிராமத்தில், விவசாயி தங்கமணி என்பவரது நிலத்தில், 2 ஏக்கரில் அமைக்கப்பட்டுள்ள நெல் ஏ.டீ.டி.39 ஆதாரம் இரண்டு விதை மற்றும் இரண்டு ஏக்கரில் அமைக்கப்பட்டுள்ள துவரை கோ-6 சான்று விதைப்பண்ணைகளை இணை இயக்குனர் தங்கராசு ஆய்வு செய்தார்.விதைப்பண்ணை பரப்பு, பயிர் ரகம், பயிரின் நிலை மற்றும் விதைப்பண்ணையால் விவசாயிகளுக்கு ஏற்படும் பயன்கள் குறித்து, விவசாயிகளிடம் கேட்டறிந்தார். விதைப்பண்ணை அமைப்பதன் மூலம் விவசாயிகளக்கு கிடைக்கும் கூடுதல் வருவாய், தரமான விதைகள், முறைப்புதிறன் அதிகரிக்கும் தன்மை, பூச்சி நோய் தாக்குதல் அற்ற, உரிய படத்ததுக்கு ஏற்ற விதைகள் பயன்கள் குறித்து விளக்கினார்.நெல்லில் அதிக தூர்கள் வெடிக்க கோனோவீடர் என்படும் களைக்கருவியை கொண்டு களை எடுக்கவும், துவரையில் அதிக பூக்கள் மற்றும் காய்கள் பிடிக்க, 2 சதவீத டி.ஏ.பி., கரைசல் தெளிக்கவும் விவசாயிகளுக்கு அறிவுரை வழங்கினார்.முன்னதாக தர்மபுரி விதை சான்று உதவி இயக்குனர் அலுவலகத்தில் ஆய்வு நடந்தது. அப்போது, தர்மபுரி மாவட்டத்தில், இது வரை சான்றளிப்பு வகையில், ஆயிரத்து, 84 ஹெக்டேரில் விதைபண்ணை பதிவு செய்யப்பட்ட விபரம், சுத்தம் செய்த விதை அளவு, 394 மெட்ரிக்கு டன் மற்றும் விதைகள் சான்று செய்த, 471 மெ.டன் விதைகள் சாதனை செய்த விபர பதிவேடுகளை ஆய்வு செய்தார்.விதை ஆய்வு துணை இயக்குனர் மணி, விதை சான்று உதவி இயக்குனர் கிருஷ்ணன், விதை பரிசோதனை அலுவலர் பெரியசாமி, விதைச்சான்று அலுவலர்கள் பழனிசாமி, அருணன், வேளாண் அலுவலர்கள் முனிகிருஷ்ணன், சுதா ஆகியோர் உடன் இருந்தனர்.

தினகரன்

இன்றைய வேளாண் செய்திகள்

28.12.2012 A.M

**மேட்டூர் அணை நீர்மட்டம் 32.84 அடி**



மேட்டூர் : மேட்டூர் அணை நீர் மட்டம் 32.84 அடியாக உள்ளது. காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மழை இல்லாததாலும், கர்நாடக அணைகளில் இருந்து தண்ணீர் திறக்கப்படாததாலும் மேட்டூர் அணைக்கு குறைவான அளவு தண்ணீரே வந்து கொண்டிருக்கிறது. நேற்று காலை 8 மணி நிலவரப்படி அணைக்கு வினாடிக்கு 1113 கனஅடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது. குடிநீர் தேவைக்காக அணையில் இருந்து வினாடிக்கு 500 கனஅடி நீர் திறக்கப்படுகிறது. அணையின் நீர் மட்டம் 32.84 அடியாக உள்ளது. நீர் இருப்பு 8.70 டிஎம்சி.

**கோதுமை ஆதார விலை குவிண்டாலுக்கு ரூ.65 உயர்வு**



புதுடெல்லி : கோதுமைக்கான குறைந்தபட்ச ஆதார விலையை குவிண்டாலுக்கு ரூ.65 உயர்த்தி மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. இதன்படி, குவிண்டாலுக்கு ரூ.1350 என விலை நிர்ணயிக்கப்பட்டது. மத்திய அரசின் இந்திய உணவு கழகம், விவசாயிகளிடம் இருந்து அரிசி, கோதுமை கொள்முதல் செய்கிறது. இதற்கு மத்திய அரசு குறைந்தபட்ச ஆதார விலை நிர்ணயிக்கிறது. கடந்த ஆண்டில் கோதுமை குவிண்டாலுக்கு ரூ.1,285 என விலை நிர்ணயிக்கப்பட்டது. இந்த ஆண்டும் அதே விலையை நீட்டிக்க வேளாண் பொருள் விலை பரிந்துரை குழு(சிஏசிபி) பரிந்துரைத்தது.

ஆனால், குவிண்டாலுக்கு ரூ.100 விலை உயர்த்த வேண்டுமென மத்திய வேளாண் அமைச்சகம் வலியுறுத்தியது. இதன்பின், பொருளாதார விவகாரங்களுக்கான மத்திய அமைச்சரவை குழு கடந்த நவம்பர் 1ம் தேதி கூடிய போது, அரிசிக்கு மட்டும் குறைந்தபட்ச ஆதார விலை நிர்ணயிக்கப்பட்டது. கோதுமை விலை குறித்து மீண்டும் பரிசீலிக்குமாறு பரிந்துரை குழுவுக்கு அறிவுறுத்தப்பட்டது.

இந்நிலையில், அமைச்சரவை குழு நேற்று முன் தினம் கூடியது. இதில், கோதுமைக்கான குறைந்தபட்ச ஆதார விலை குவிண்டாலுக்கு ரூ.1350 என நிர்ணயம் செய்யப்பட்டது. இதை பின்னர் நிருபர்களிடம் நிதியமைச்சர் ப.சிதம்பரம் தெரிவித்தார். இம்மாதம் முதல் தேதி நிலவரப்படி, மத்திய அரசின் உணவு கிடங்குகளில் மொத்தம் 3.76 கோடி டன் கோதுமை இருப்பில் உள்ளது.

இதில், 75 லட்சம் டன்னை ஏற்றுமதி செய்யவும், 75 லட்சம் டன்னை உள்ளூர் சந்தையில் விற்கவும் விலை பரிந்துரை குழு பரிந்துரைத்துள்ளது.
தற்போது 253.17 லட்சம் ஹெக்டேர் நிலத்தில் கோதுமை பயிரிடப்பட்டுள்ளது.

மேலும் 25 லட்சம் டன் ஏற்றுமதிக்கு அனுமதி

மத்திய அரசின் இருப்பில் இருந்து மேலும் 25 லட்சம் டன் கோதுமையை ஏற்றுமதி செய்ய மத்திய அமைச்சரவை குழு ஒப்புதல் அளித்துள்ளது. இதன்படி, பிஏசி, எம்எம்டிசி, எஸ்டிசி போன்ற அரசு

நிறுவனங்கள் மூலம் கோதுமை ஏற்றுமதி செய்யப்படும். அடிப்படை விலையாக டன்னுக்கு 300 டாலர் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. வரும் ஜூனுக்குள் இந்த ஏற்றுமதி முடிக்கப்படும்.

### முட்டை விலை 5 காசு அதிகரிப்பு



நாமக்கல் : தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழுவின் விலை நிர்ணய குழு கூட்டம் நாமக்கல்லில் நேற்று நடந்தது. இதில் 329 காசாக உள்ள முட்டை விலையில் 5 காசுகள் உயர்த்தி ஒரு முட்டையின் பண்ணை கொள்முதல் விலை 334 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டது. புத்தாண்டையொட்டி கேக் தயாரிப்புக்கு முட்டை தேவை அதிகரிப்பு மற்றும் மற்ற மண்டலங்களில் முட்டை விலை உயர்வு போன்ற காரணங்களால் நாமக்கல் மண்டலத்தில் முட்டை விலை உயர்த்தப்பட்டுள்ளதாக பண்ணையாளர்கள் தெரிவித்தனர். இதேபோல் ஒரு கிலோ முட்டைக் கோழி விலை ரூ.38 ஆகவும், ஒரு கிலோ கறிக்கோழி விலை ரூ.71 ஆகவும் நிர்ணயம் செய்யப்பட்டது.

மற்ற மண்டலங்களில் முட்டை விலை விபரம் (பைசாவில்) சென்னை , 339, பெங்களூர் , 330, மைசூர் , 325, ஹைதராபாத் , 351, மும்பை , 351, கொல்கத்தா , 360, பர்வாலா , 339, டெல்லி , 360.

### அரவக்குறிச்சி விவசாயிகள் ஹைபிரிட் சூரியகாந்தி விதைகளை பயிரிட்டால் கூடுதல் லாபம் பெறலாம் வேளாண் மை உதவி இயக்குனர் யோசனை

அரவக்குறிச்சி, : அரவக்குறிச்சி பகுதியில் ஹைபிரிட் சூரியகாந்தி விதைகள் மானிய விலையில் கிடைப்பதால் அதனை வாங்கி பயிரிட்டு அதிக மகசூல் பெற்று லாபம் அடையலாம் என வேளண்மை உதவி இயக்குநர் கைலாசபதி தொழில் நுட்ப ஆலோசனைகளை வழங்கியுள்ளார். கரூர் மாவட்டத்திலேயே அரவக்குறிச்சி பகுதியில் தான் சூரியகாந்தி அதிகளவில் பயிரிடப்பட்டு

வருகிறது. அரவக்குறிச்சி வட்டத்தில் சுமார் 22 ஆயிரம் ஏக்கரில் சூரியகாந்தி பயிரிடப்பட்டுள்ளது. தற்போது சூரியகாந்தி பூக்கள் பூத்து எங்கு பார்த்தாலும் மஞ்சள் போர்வை போர்த்தியது போல் காட்சி அளிக்கிறது. சூரியகாந்தி பயிரிட்டுள்ள விவசாயிகள் அதிக மகசூல் பெற்று கூடுதல் லாபம் அடைய தேவையான தொழில்நுட்ப ஆலோசனைகளை அரவக்குறிச்சி வட்டார வேளண்மை உதவி இயக்குனர் கைலாசபதியிடம் கேட்டபோது அவர் கூறியதாவது: 90 நாட்கள் குறுகிய கால பணப்பயிரான சூரியகாந்திக்கு இப்பருவத்தில் நல்ல விளைச்சலை ஏற்படுத்த தற்பொழுது சூரியகாந்தி பூவை அயல் மகரந்த சேர்க்கைக்கு உட்படுத்த வேண்டிய தருணமாகும். இதற்கு காலை 7 மணி முதல் 11 மணிக்குள் ஒரு பூவுடன் மற்றொரு பூவை லேசாக தேய்த்து ஒற்றி எடுக்க வேண்டும் அல்லது ஒரு மெல்லிய துணியால் பூவை லேசாக தேய்க்க வேண்டும்.

இவ்வாறு செய்தால் அயல் மகரந்த சேர்க்கை ஏற்பட்டு 90வது நாளில் அறுவடை செய்யும் போது பூ முழுமை அடைந்து விதைகள் திரட்சியாகவும், இடைவெளியின்றி நெருக்கமாகவும் கிடைக்கும். இதனால் விளைச்சலும், விதைகள் எடை அதிகரித்து கூடுதலாக லாபம் கிடைக்கும். மேலும் இதுதொடர்பான வேளாண் தொழில்நுட்ப ஆலோசனைகளை விவசாயிகள் அரவக்குறிச்சி வட்டார வேளாண் அலுவலகத்திற்கு நேரில் வந்து பெறலாம்.

அதிக மகசூல் கிடைக்கும் வல்லுநர் ஹைபிரிட் சூரியகாந்தி விதைகள் 50 சதவீத மானிய விலையில் கிடைப்பதால் இந்த வாய்ப்பை விவசாயிகள் பயன்படுத்தி கொள்ளலாம் என அவர் கூறினார்.

### வத்திராயிருப்பு பகுதியில் தண்ணீரின்றி கருகும் நெற்பயிர்கள்

வத்திராயிருப்பு, : வத்திராயிருப்பு பகுதியில் தண்ணீரின்றி நெற்பயிர்கள் கருகி வருகின்றன. பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு அரசு ஏக்கருக்கு ரூ.25 ஆயிரம் இழப்பீடு வழங்க வேண்டும் என விவசாயிகள் கண்ணீர்மல்க கோரிக்கை விடுத்துள்ளனர்.

வத்திராயிருப்பு பகுதியில் விவசாயம் முக்கிய தொழிலாக உள்ளது. இப்பகுதியில் நெல் அதிகளவில் பயிரிடப்படுகிறது. கடந்த சில ஆண்டுகளாக பருவமழை போதிய அளவில் இல்லாததால் விவசாயம் பாதிக்கப்பட்டது. இந்த ஆண்டும் வடகிழக்கு பருவமழை பொய்த்துவிட்டதால் விவசாயம் கேள்விக்குறியாகிவிட்டது. பிளவக்கல் பெரியாறு, கோவிலாறு அணைகளின் நீர்பிடிப்பு பகுதிகளிலும் போதிய மழை இல்லை. இதனால் அணைகள் நிரம்பவில்லை. அணையில் இருப்பு நீரும், சமீபத்தில் திறந்து விடப்பட்டு, 8 கண்மாய்களுக்கு ஓரளவே தண்ணீர் கிடைத்தது.

இப்பகுதியில் 40க்கும் மேற்பட்ட கண்மாய்கள் வறண்ட நிலையில் உள்ளன. இதனால் விவசாய கிணறுகளில் நீர்மட்டம் குறைந்து வருகிறது. கோட்டையூர், மகாராஜபுரம், இலந்தைக்குளம், மூவரைவென்றான், கோவிந்தநல்லூர் உள்ளிட்ட கிராமங்களில் கிணறுகளில் நீர்மட்டம் குறைந்துவிட்டது. இருக்கும் நீரையும், மின்தடையால் மோட்டார் மூலம் விளைநிலங்களுக்கு தண்ணீர் பாய்ச்ச முடியவில்லை. இதனால் நெற்பயிர்கள் கருகி வருகின்றன.

இது குறித்து ரங்கபாளையத்தைச் சேர்ந்த விவசாயி ரணவீரன் கூறுகையில், `45 ஏக்கர் பரப்பில் நெல் விவசாயம் செய்துள்ளேன். இதில் 43 ஏக்கரில் நெற்பயிர்கள் தண்ணீரின்றி கருகியுள்ளன. 4 விவசாய கிணறுகளிலும் தண்ணீர் பற்றாக்குறை உள்ளது. இருக்கும் தண்ணீரையும் மின்தடையால் விளைநிலத்தில் பாய்ச்ச முடியவில்லை. பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ.25 ஆயிரம் நஷ்டஈடு வழங்க வேண்டும். விவசாய பணிகளுக்காக பெறப்பட்ட வங்கி கடன்களை அரசே ஏற்க வேண்டும் என கண்ணீர்மல்க தெரிவித்தார்.

## சாத்தான்குளம் அருகே தரமற்ற நெல் உலர்த்தும் தளம்

சாத்தான்குளம், : சாத்தான்குளம் அருகே தரமற்ற நிலையில் நெல் உலர்த்தும் தளம் அமைக்கப்படுவதற்கு விவசாயிகள் எதிர்ப்பு தெரிவித்து பணிகளை நிறுத்தினர்.

சாத்தான்குளம் அருகே ஸ்ரீவெங்கடேஸ்வரபுரம் பஞ்சாயத்துட்பட்ட செங்குளத்தில் திருச்செந்தூர் வேளாண்மை விற்பனை நிலையம் சார்பில் ரூ.4 லட்சத்தில் நெல் உலர்த்தும் தளம் அமைக்க முடிவு செய்யப்பட்டது. இதில் அஸ்திவாரம் தோண்டாமல் பணிகளை தொடங்கப்பட்டது. மேலும் ஆற்று மணலுக்கு பதில் களிமண்ணை கொண்டு கட்டவும் முயற்சி செய்யப்பட்டது.

இதையறிந்த செங்குளம் ஆயக்கட்டு விவசாயிகள் சங்கத் தலைவர் முருகேசன், இளமால்குளம் விவசாயிகள் முன்னேற்ற சங்கத் தலைவர் பொன்கந்தசாமி, உறுப்பினர்கள் சின்னத்துரை, பாலமுருகன் உள்பட பலர் அந்த பணிகளை பார்வையிட்டு எதிர்ப்பு தெரிவித்தனர். இதையடுத்து நெல் உலர்த்தும் தளம் அமைக்கும் பணிகள் நிறுத்தப்பட்டது. இதுகுறித்து விவசாயிகள் சாத்தான்குளம் காவல் நிலையம், தாசில்தார் குமாரிடம் புகார் தெரிவிக்கப்பட்டது.

இதுகுறித்து செங்குளம் விவசாய சங்கத் தலைவர் முருகேசன் கூறிகையில், ‘ செங்குளம் பகுதியில் நெல் உலர்த்தும் தளம் இல்லாததால், திருச்செந்தூர் வேளாண்மை விற்பனை நிலையம் சார்பில் பணிகள் தொடங்கியது. அதிகாரிகள் யாரும் பார்வையிடாததால் பணிகள் தரமற்ற நிலையில் அமைக்கப்பட இருந்தது. விவசாயிகள் எதிர்ப்பு தெரிவித்ததால் பணி நிறுத்தப்பட்டது. எனவே

வேளாண் அதிகாரிகள் பார்வையிட்டு நல்ல முறையில் அமைக்க வேண்டும். இல்லையேல் விவசாயிகள் சங்கம் சார்பில் போராட்டம் நடத்த உள்ளோம்‘ என்றார்.